செய்தி வெளியீடு எண். 33-2017 நாள்: 16.06.2017

**கத்தார் நாட்டில் வாழும் விழுப்புரம் மாவட்டத்தினை சேர்ந்த இந்தியப் பிரஜைகளின் நிலை குறித்து அறிய மின்னஞ்சல், டிவிட்டர் முகவரி மற்றும் உதவி மையங்கள் இந்திய தூதரகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

******

கத்தார் நாட்டுடன் சவுதி அரேபியா உள்ளிட்ட ஐந்து அரபு நாடுகள் ராஜ்ஜிய உறவுகளை முறித்துக் கொண்டுள்ளதைத் தொடர்ந்து அந்நாட்டில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. மேலும், விமான சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து கத்தார் நாட்டின் தலைமையகமான தோகாவில் அமைந்துள்ள இந்தியத் தூதரகம் அந்நாட்டில் நிகழும் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்பாக கவனித்து வருவதுடன் கத்தார் நாட்டுடன் தொடர்பு கொண்டு கத்தார் நாட்டில் வாழும் இந்தியப் பிரஜைகளின் பாதுகாப்பிற்கு உறுதியளித்துள்ளது என்றும், அங்கு அவர்கள் சுமூகமான வாழ்க்கையை தொடர அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாகவும், மேலும் இந்தியப் பிரஜைகளின் நிலை குறித்து அறிய கீழ்க்கண்ட மின்னஞ்சல், டிவிட்டர் முகவரி மற்றும் உதவி மையங்கள் இந்தியத் தூதரகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனவும், தமிழக அரசின் பொதுத் துறை கூடுதல் அரசு செயலாளரிடமிருந்து வரப்பெற்ற கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டிவிட்டர் முகவரி: TwitterHandle[@IndEmbDoha]

மின் அஞ்சல் : labour.doha@mea.gov.in

உதவி மைய விபரங்கள்:

தொலைபேசி எண்: (அலுவலக நேரங்களில்): 44255777

தொலைபேசி எண்: (அலுவலகம் இயங்காத நேரங்களில்): 55575086

இந்திய கலாச்சார மையம் (Indian Cultural Centre ICC) :50536234

இந்தியன் கம்யூனிட்டி பெனவோலண்ட் ஃபாரம், Indian Community Benevolent Forum (ICBF): 55512810, 55532367, 55342708

எனவே, கத்தார் நாட்டில் வாழும் விழுப்புரம் மாவட்டத்தினை சேர்ந்த இந்தியப் பிரஜைகளின் நிலை குறித்து மேற்காணும் மையங்களில் தொடர்புகொண்டு, விவரங்களை அறியலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.